அவிநாசி ஊராட்சி ஒன்றியம்

# பழங்கரை (முதல் நிலை) ஊராட்சி மன்றம்

**நடவடிக்கைகள்**

PALANGARAI PANCHAYAT (GR.I) AVINASHI UNION

முன்னிலை : திருமதி. P. கோமதி தலைவர் அவர்கள், பழங்கரை ஊராட்சி மன்றம்.

கட்டிட வரைபட அனுமதி எண். 204 /2023 2024 நாள் : 27.03.2024

பொருள் : கட்டிட வரைபட அனுமதி – அவிநாசி ஊராட்சி ஒன்றியம் – பழங்கரை ஊராட்சி – புதிதாக கட்டிடம் / கூடுதல் கட்டிடம் – குடியிருப்பு [அடுக்கு மாடி] / தொழிற்சாலை / வணிகம்– கட்டிடம் கட்ட அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை : 1) அரசாணை எண். 225/ஊ.வ.துறை நாள் : 18.08.1997

2) அரசு கடித எண். 40634 / நி 2.97/2 ஊ.வ.துறை நாள் : 17.11.1997

3) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு எண். 82449 / 97 / 5 நாள் : 17.11.1997

4) திரு / திருமதி K. N. மணிவண்ணன் S/o G. நாராயண ரெட்டியார் என்பவரது விண்ணப்பம்.

இணையதள விண்ணப்பம் – SWP/BPA/049061/2023
நாள் – 28-10.2023

**உத்தரவு :**

அவிநாசி ஊராட்சி ஒன்றியம் பழங்கரை ஊராட்சிக்குட்பட்ட அவிநாசிலிங்கம்பாளையம் குக்கிராமத்தில் ஸ்ரீ லக்ஷ்மி நகர். க.ச.எண். 463/3A1A16B –ல் மனை எண் 19, 20, 25, 26 ல் உள்ள இடத்தில் புதிய குடியிருப்பு [அடுக்குமாடி] கட்டிடம் (கான்கிரீட், ஓடு, சீட்டு) கட்டிக்கொள்ள அனுமதி வேண்டி பார்வை 4-ல் காணும் கடிதம் வழி சமர்ப்பித்துள்ள வரைபடங்கள் தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1991-ன்படி அங்கீகாரம் செய்யப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வுத்திரவு தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் புதிய கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள் :**

1. புதிய கட்டிடம் கட்ட 27.03.2024 முதல் 26.03.2029 வரை ~~ஒரு~~ ஐந்து வருட காலத்திற்குள் அனுமதி அளிக்கப்படுகிறது. அனுமதி காலம் முடிவடைந்தவுடன் மீண்டும் தற்போது செலுத்திய கட்டணத்தைப்போல் செலுத்தி அனுமதி புதுப்பித்துக்கொள்ள வேண்டும். தவறி கட்டிடம் கட்டப்படுமானால் நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.
2. கட்டிட வேலை முடிந்து 15 தினத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலமான அறிக்கை கொடுக்கப்படவேண்டும்.
3. கட்டிட வேலை நடைபெறும் பொழுது கட்டிடம் கட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் எப்பொழுதும் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்திருக்கப்பட வேண்டும்.
4. கட்டிடத்தின் படிக்கட்டுகள், சன்சேட் முதலியவைகள் ஊராட்சி நிலத்திலோ, ரோட்டிலோ கட்டக்கூடாது.

5. கட்டிட வேலை அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி இருக்க வேண்டும். ஏதாவது மாற்றம் இருக்குமானால் அதற்கேற்ப வரைபடங்களும் திருத்தியமைத்து மீண்டும் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
6. கட்டிடத்திற்கு ஒரு பகுதியில் கண்டிப்பாக ஒரு கழிப்பிடம் கட்ட வேண்டும்.
7. கட்டிடம் கட்டும் இடத்தில் ஜலதாரை இடம் ரோடு முதலிய பிரச்சனைகள் பொருத்து ஏற்படும் தகராறுகளை ஊராட்சி மன்றம் எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது. மேலும் இது சம்பந்தமாக தகராறுகளை விண்ணப்பதாரரே தன் சொந்த செலவினில் தீர்த்துக்கொள்ள வேண்டும்.
8. கட்டிடம் கட்ட தேவையான கல் செங்கல் போன்ற கட்டிட சாமான்கள் முதலியவைகள் ரோட்டில் போட்டு வைத்துக்கொண்டு போக்குவரத்து இடையூறு செய்யக்கூடாது. அவ்வாறு மனுதாரரால் இடையூறு ஏற்பட்டால் கட்டிட அனுமதி மறுக்கப்படுவதுடன், அதனால் ஏற்படும் செலவையும் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
9. கட்டிடம் பொது சுகாதார முறைகளுக்கு ஏற்ற வகையில் கட்டப்படவேண்டும். கழிப்பிடம் விதிகளின்படி வரைபடத்தில் கண்டுள்ளவாறு கட்டப்படவேண்டும்.
10. அரசினரால் அவ்வப்போது உத்தரவிடும் சகலவிதமான உத்தரவுகளுக்கும் மனுதாரர் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
11. இந்த கட்டிட அனுமதி தவறான முறையில் பெறப்பட்டதாக அல்லது தவறுதலுக்கு இடம் கொடுக்கக்கூடியதாகவோ இருக்கும் என நிர்வாக அதிகாரி கருதும் பட்சத்தில் அல்லது அவருக்குத் தோன்றும் உசிதமான காரணங்களைக் கொண்டு இந்த கட்டிட அனுமதி ரத்து செய்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ உட்பட்டதாகும்.
12. மேற்கூறிய விதிமுறைகளை மீறினால், அதனால் ஏற்படும் சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் விண்ணப்பதாரரே முழுப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
13. மனையின் எல்லைப்பகுதி கட்டிடப்பரப்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் உயர்மட்டத்திலிருந்து 5 அடி அல்லது 1.52 மீட்டர் உயரத்திற்கு உட்பட்டதாக கற்சுவர் அல்லது வேலி தவிர எவ்வித கட்டிட சுவரோ கட்டக்கூடாது.
14. ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிற்கும் எல்லைப்பகுதிக்கும் இடையே குறைந்தது 5 அடி அல்லது 12.5 மீட்டர் அளவு திறந்தவெளி விடப்பட வேண்டும்.
15. மனையில் திறந்தவெளி இருக்கும் பகுதியில் சுகாதாரத்துடன் திறந்தவெளி பேணப்பட வேண்டும்.
16. கடைக்கல் தோண்டவும் நிலத்தை சமப்படுத்தவும் தவிர வேறு காரணங்களுக்காக திறந்தவெளியில் குழாய்கள் தோண்டவோ பள்ளங்கள் ஏற்படுத்தவோ கூடாது.
17. மனையில் முன்புறத்தில் அல்லது பின்புறத்தில் ஏதாவது மரம் நட்டு பேணிக்காக்க வேண்டும்.
18. கட்டிடம் கட்டப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு உடனடியாக முடிக்கப்பட்ட தேதிகட்டிடம் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தேதி கட்டிடம் கட்ட ஏற்பட்ட செலவினம் முதலியவற்றை தெரிவித்து உரிமையாளர் கட்டிட வரிவிதிப்பிற்கு உட்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

19. கட்டிடத்தில் தீ விபத்து ஏற்படாதவாறு பாதுகாப்பு செய்வதிலும் சுற்றுபுற சூழ்நிலை சுகாதாரத்தினை பேணிக்காப்பது உரிமையாளர்களின் கடமையாகும்.

20. அரசு உத்திரவுப்படி மழைநீர் சேகரிப்புத்தொட்டி கண்டிப்பாக அமைக்க வேண்டும்.

21. கதவுகள், ஜன்னல்கள் முறையே 6'3", 4'3" அளவுக்கு குறையக்கூடாது.

22. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு தவறாமல் அமைக்க வேண்டும்.

23. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் கட்டிடம் இருந்தால் நகர ஊரமைப்புத்துறையின் நிபந்தனைகளின்படி கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

இணைப்பு :-அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் : எண்ணிக்கை - 4

P. [signature]

தலைவர்

பழங்கரை ஊராட்சி மன்றம் (முதல் நிலை)

அவிநாசி ஊராட்சி ஒன்றியம்

பெறுநர் :

திரு / திருமதி.

K.N. மணிவண்ணன்

S/o நாராயண ரெட்டியார்

விண்ணப்பதாரருக்கு ரூ. 25516000 /- மதிப்பீட்டில் கட்டிடம் கட்டிக்கொள்ள இதன் மூலம் அனுமதியளிக்கபடுகிறது.